

# அமரர். சசிதேவி லிங்கேஸ்வரன்

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி நிறைவேற்று உத்தியோகத்தர்)

அவர்களின்



# நினைவு மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உ

சிவமயம்



தம்பலகாமம் நடுப்பிரப்பந்திடலை பிறப்பிடமாகவும்,

திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்.திருமதி. சசிதேவி லிங்கேஸ்வரன்

இலங்கை வங்கி ஓய்வுநிலை நிறைவேற்று உத்தியோகத்தர்

**அவர்களின் நினைவாக**

**வெளியிடப்படும்**





# நினைவு மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் தலைவியாய்
அவனியில் நட்புடன் வாழ்ந்த
எங்கள் குலவிளக்கிற்கு
கண்ணீரும் கவலைகளும்
ஒன்றாக இணைந்த
நிலையில் தங்கள் ஆத்மா சாந்தி
அடைய கோணேசப் பெருமானை
வேண்டி இந்த அன்பு இதழை
காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவஞ்சலி



இவ்வுலகில்

1970 - 04 - 14

இறையுலகில்

2023 - 03 - 18

அமரர்.

## சசிதேவி லிங்கேஸ்வரன் அவர்கள்

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி நிறைவேற்று உத்தியோகத்தர்)

## திதி நிர்ணய வெண்பா

"சிந்தைநிறை சுபகிருது வருடம் தன்னில்
வந்ததிதி அபரபட்ச ஏகாதசி தேய்பிறையில்
சசிதேவி எனும் புவிவாழ்வை முடித்தே
எந்தை பிரானடி இணைந்தார் இனிதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்ச புராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்(து) அடி போற்று கின்றேனே !!

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்ற டியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலவர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞானம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலை யமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கப் பொழுதினை சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளு வதினியே!

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டி பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்வேண்டில் நான்
மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ்இருக்க என்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலம்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனாய் வாழ்வினைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா ஞான சற்குண நேயா
ஒப்பிலா மாமணித் திரிவாசா
வித்தகா ஞான சந்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச் சரிதம்

செந்நெல் செழித்து வளரந்தோங்கும் தம்பலகாமம் நடுப்பிரபந்திடலில் மாசுமறையில்லாத 1970 சித்திரை 14ஆம் நாளில் தம்பையா - நவமணி தம்பதியருக்கு செல்வம் நிறை குடும்பத்தில் கடைகுட்டியாக வந்து பிறந்தார்.

அன்புச் சகோதரர்களாக சசிகலாவும் சசிதரன் அவர்களும் வந்து உடன் பிறந்தனர். பிரதி அதிபராக சேவையாற்றி வந்த தந்தையார் மக்களை கல்வியில் உயர்த்தி வைக்க எண்ணம் கொண்டு மூத்த மகளைப்போல சிறப்பான கல்லூரிகளில் சேர்த்து வைத்தார்.

இளமையும் அழகும் ,அறிவும் வாய்க்கப்பெற்ற சசிதேவியை தம்பலகாமம் மகா வித்தியாலயத்தில் சேர்த்து வைத்தார்.தரம் 01 தொடக்கம் தரம் 08 வரையான வகுப்புவரை கலைகளிலும், கல்வியிலும் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தார்.தந்தையார் கிண்ணியா பெண்கள் கல்லூரயில் சேர்த்து வைக்க நினைத்து தரம்09 தொடக்கம் தரம்10 வரை கற்றிடச் செய்தார். செயற்றிறன் மிக்க மாணவியாக தனது திறமையினை கல்லூரியில் காட்டி ஆசிரியர்களின் நன் மதிப்பினை பெற்றார்.

காலம் விரைந்தோடி மறைந்து போனது தரம்11 வகுப்பில் கல்வி கற்க திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளீர் கல்லூரியில் பெற்றோர் சேர்த்து வைத்தனர்.கல்வியிலும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் சிறந்த மாணவியாக தனது திறமையைக் காட்டினார்.

பதின்ம வயது வந்து சேரவே க.பொ.த (உயர்தரம்) வர்த்தகப் பிரிவில் சேர்ந்து அதே கல்லூரியில் கல்வி கற்றுத் தேறினார். இறை சிந்தனையும், உறவுகளைப் பேணும்முறையும், தெரிந்து வைத்து இருந்தார். சகலரோடும் இனிய புன்னகை சிந்தியே நல்லுறவு பேணி வந்தார்.

கற்ற கல்வியின் பேறாக 1991இல் திருகோணமலை இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் நியமனம் பெற்றார். மூத்த சகோதரி சசிகலா விஜயநாதன் அவர்களோடு ஒரே வங்கியில் பணி புரிந்தார்.

சில ஆண்டுகள் தனது பணியினை சிறப்பாக செய்ததன் விளைவாக, சீனக்குடா இலங்கை வங்கி கிளையில் முகாமையாளராக பதவி உயர்வு பெற்றார். சிறிது காலம் பணி செய்து வரும் வேளையில் இடமாற்றம் பெற்று ஆலங்கேணி இலங்கை வங்கி கிளையில் முகாமையாளராக பணிபுரிந்தார்.

அழகும் இளமையும் கூடி வரும்வேளை. குடும்பத்தின் குலக்கொடியாய் திருமணப்பருவத்தை அடைந்து நின்றார். பெரியோர்கள் ஒன்றுகூடி நிட்சயித்து விநாயகமுர்த்தி இராசமணி தம்பதிகளின் செல்வ மகன், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காசாளராகப் பணி புரிந்த லிங்கேஸ்வரன் என்பவரை 1996.11.27 அன்று உற்றாரும் உறவினர்களும் வாழ்த்தி நிற்க, வாழ்க்கை துணைவனாக கரம் பிடித்தார். இல்லறம் பேணி கருத்தொருமிக்க தம்பதியராய் இனிதாக வாழ்ந்து வந்தனர்.

ஆலங்கேணியிலிலுருந்து இடமாற்றம் பெற்று கிண்ணியா இலங்கை வங்கிக்கிளைக்கு வந்துசேர்ந்தார். கிண்ணியாவின் அருகாமை யில் தம்பலகாமம் அமைந்திருந்ததால் தெரிந்த முகங்களோடு, இனிதாக தனது வங்கிக் கடமைகளை செய்து வந்தார்.

இல்லற வாழ்க்கையின் பேறாய் தனுஷிகா வைப் பெற்றெ டுத்தார். திருகோணமலை கச்சேரி இலங்கை வங்கிக் கிளையில் முகாமையாளராகப் பணி புரிந்து வந்தார். முத்த சகோதரி ஓய்வுபெற்றுச் சென்றாலும், அருகிலுள்ள வீட்டில் வசித்து வந்ததால் உறவைப் பேணி வந்தார் .சகோதரனாகிய சிசிதரன் மீதுகொள்ளை அன்பு கொண்டு விளங்கினார்.தந்தையார் தம்பையா மரணமடைந்த போதும், தாயாரை தனது பாதுகாப்பில் பேணி வந்தார்.

படிப்படியாக பதவி உயர்வு பெற்று வந்த இவர். திருகோண மலை இலங்கை வங்கியின் பிரதான கிளையில் நிறைவேற்று




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றார். கடமையாற்றி வந்த காலத்தில் தனது சக ஊழியர்களோடு அன்பையும், இனிய உறவையுமே பேணி வந்தார்.

இவ்வாறாக பணி புரிந்து வந்த வேளையில் சிறிது காலம் கொடிய நோயுடன் போராடி வந்தார். இருந்த போதும், தனது கருமங்களை இனிதாக நகர்த்தியே வந்தார்.

பெற்ற செல்வ மகள், கணவன், தாய் உறவுகள், உற்றார் எல்லாம் கலங்கி நிற்க கொழும்பில் அவர் உயிர் 2023.03.18 பிரிந்து விண்ணுலம் சென்றது மண்ணுலகில் வாழ்வு போதுமென் றெண்ணி அனைவரையும் கதி கலங்க வைத்து, பூதவுடல் காட்டியே மறைந்து போனார்.



**வாழ்க்கை கணக்கு நான்கு**

1. நல்லவற்றை கூட்டிக் கொள்ளுதல் ( + ) வேண்டும்
2. தீயனவற்றை கழித்துக் கொள்ளுதல் ( - ) வேண்டும்
3. அன்பைப் பெருக்கிக் கொள்ளுதல் ( X ) வேண்டும்
4. எதிர்காலத்தை வகுத்துக் கொள்ளுதல் ( ÷ ) வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மலரும் நினைவுகள்"

"அன்பிற்கும் உண்டோ
அடைக்குந் தாழ் "

வீணைக்கொடி உடையோன் வீற்றிருந்த கோணைநகர்
தேன்பாயும் நதி விழுந்த இருபோகம் விளையும் பசும் வயல் வெளிகள்
மீன்பாடும் குரைகடலின் வெள்ளி மழை துள்ளி விழும்
மலைத் தொடர்கள்
வானுயர்ந்து மறை பொழிந்து, சம்பந்தர் பதிகம் பெறு
தென்கயிலை பூமியிதாம்
புண்ணிய பூமிதனில் எண்ணிய கருமத்தை ஏற்றியே வாழ்ந்த மங்கை

2023 ஆண்டு பங்குனித் திங்கள் எங்கள் குடும்பத்தின்
ஒட்டு மொத்த சந்தோஷத்தையும் புரட்டிப் போட்ட நாள்.
விதி எந்த வடிவில் வரும் என்று யாருக்கு தெரியும்.

விதி தமிழில் அற்புதமான வார்த்தை
நினைத்த போது உபயோகிக்கலாம்
நிகழ்வின் வெளி வட்டத்தில் இருந்து பார்ப்பவர்களுக்கு
வேதாந்தம் பேசத்தான் முடியும்
உன் மரணத்தால் வந்த வேதனையின் வலி
வந்த ரணம் காலத்தால் மாறும் என்பர்.
உறவுகளின் இதயங்களில் விழுந்த வெட்டு எப்போதும் மாறும்
வருடங்கள் உருண்டோடினாலும் பெரிய தழும்பாக நெஞ்சில் இருக்குமே.
தடவும் போதெல்லாம் அந்த நினைவலைகள் உருட்டி
கொண்டேயிருக்குமே அம்மா

வரலாறு படைத்தவர்களும் சாதித்தவர்களும் மட்டுமே அனைவராலும்
நினைவு கூறப்படுவாரகள் எனபது நிஜமில்லை.

ஒரு சாதாரண பாமரனாக இருந்தாலும் அவர் அன்பாளர்
(30 வருடம் இலங்கை வங்கி சேவையில்)
என்கின்ற ஓர் அடையாளம் போதும் மனித இதயங்களின்
விசாக்களை (Visa) இலகுவாக பெற்றுக்கொள்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பேர்பட்ட மங்கையில் ஒருவர்தான் அமரர் சசிதேவி லிங்கேஸ்வரன்.என் வாழ்கையின் இதிகாசங்களில் பல பக்கங்களின் நாயகி என் வாழ்கை தந்த அனைத்து சுவாரஸ்யங்களிலும் மேன்மையானது
என் மனைவியாக வந்த அந்த நிமிடம்.

நம்மை கடந்து போன தருணங்களை பிடித்து வைத்துக்கொள்ளும் வாய்ப்பு புகைப்படங்களுக்கு மட்டுமே உண்டு என அமெரிக்க சிறுகதை எழுத்தாளர் கூறியது எவ்வளவு பெரிய உண்மை என்பது தற்சமயம் நினைவுக்கு வருகின்றது.

புகைப்படங்கள் அசையாமல் ஆயிரம் கதை பேசும் வல்லமை கொண்டவை என்பதை என் துணைவியின் புகைப்படங்கள் எமக்கு உறுதிப்படுத்தின.

நாம் நினைத்தாலும் எம் நினைவுகளில்
அவற்றை அழித்து விட முடியாது.

எம் குடும்பத்தாருடன் மகிழ்ச்சி தந்த நாட்களையும்
தருணங்களையும் நாம் இரை மீட்டிப் பார்ப்போம்
இன்றைய துன்ப நினைவுகள் தூர விலகிப் போகும்

வெளிச்சத்தை பாய்ச்சுவதை தவிர எந்த வகையிலும்
இருளை ஒழிக்க முடியாது என்பதுதான் நிதர்சனம்

"நிலைத்து வாழும் ஆலயம்
நெஞ்சில் ஓர் ஆலயம்"



என்றும் அன்புடன்
உன் லிங்கேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது அன்பான அம்மா
## மீனாம்மா!



உன் பிரிவால் தவிக்கும் உன் தன்சி குட்டியின் மடல்...

என்னை தன்சி குட்டி தன்சி குட்டி என்று அழைப்பது தான் எனது காதில் கேட்டுக்கொண்டே இருக்கிறது.

வீட்டுக்குள் வந்தால் உங்கள் ஒவ்வொரு பொருட்களும்
உங்களையே ஞாபகப்படுத்துகின்றது
இந்தியா போய் சுகமாகத்தானே வந்தீர்கள் திடீரென எப்படி
இப்படியானது என்னால் நம்ப முடியாது உள்ளது.
அம்மா உங்களின் ஆசைகளையும் கனவுகளையும் நான்
நிறைவேற்றுவேன் நீங்கள் என் கூட இருந்தால் நான்
சந்தோசப்பட்டு இருப்பேன். இப்ப உங்கள் ஆசி எனக்கு
என்றென்றும் தேவை நீங்கள் கடவுளாக இருந்து
என்னை வழி நடத்துங்கள்



உங்கள் பிரிவால் வாடும்
தன்சி குட்டி

### மறக்கக் கூடாத ஐந்து

01. கற்று முடித்த பின் குருவை மறக்கக்கூடாது.
02. மனைவியை அடைந்த பிறகு அன்னையை மறக்கக்கூடாது
03. உதவியைப் பெற்றவர்கள் உதவி செய்தவர்களை மறக்கக்கூடாது.
04. கரையைக் கடந்தவர்கள் படகையும், கடவுளையும் மறக்கக்கூடாது.
05. நோய் நீங்கியவர்கள் மருத்துவர்களை மறக்கக்கூடாது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அன்பான மீனா!

நாங்கள் ஒரே வீட்டில் ஒன்றாக
வாழ்ந்த வேளையில்
நீ பொம்மை குட்டிமாதிரி
மெல்ல மெல்ல நடந்து
வருவதையும் எங்களுடன் சேர்ந்து
விளையாடுவதையும் எக்காலத்திலும் எம்மால் மறக்க முடியாது.....

போயிற்று வருவேன் என்று கூறி சென்றாய் நீ
திரும்ப வரவே இல்லை......
எங்களை ஏமாற்றி விட்டாய்......
உன்னுடைய ஆத்மா இறைவனுடன் சேர
வேண்டும் என்று கடவுளை வேண்டுகின்றோம்.

இங்ஙனம் உன் சகோதரங்கள்
சுகி அக்கா, கலா அக்கா, தயா, வித்தி
ஸ்ரீ அண்ணா, சுபா, கரன், பிரதீபன், பானு, சுமித்தி
ரம்யா, சரண்யா, டிலக்சன், கிரிசாந், தர்சனா

---

"அணைக்கவே இரண்டு கைகள்
அனுபவித்த உறவின் வாழ்வில்
இணைக்கவோ ஒன்றே உள்ளம்
இயற்கை சுகத்தில் நித்தம்
பிணைக்கவோ சில நாள் வாழ்க்கை
பெரும் பெரும் நினைவை எல்லாம்
அணைக்கவே வருவான் காலன்
அளந்து தான் கொடுத்தான் இறைவன்"

-கவிஞர் கண்ணதாசன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறவாத நினைவுகள்

தோன்றிற் புகலோடு தோன்றுக என்றாற்போல்
தம்பையா-நவமணி எனும் தம்பதியினருக்கு கருவாய் உருவாகி
புகழ் பூத்த பெண்ணாய் உருவெடுத்தாய்.
சொற்பகாலம் காசுதீன் - ம.ஃபூபா தம்பதியினரின்
பெறாமகளாய் ஒளிவீசினாய்
இன்று பலர் மனதையும் உறக்கத்தில் ஆழ்த்தி விட்டுச் சென்றாயே.

அன்று அப்பா-வாப்பாக்களினால் ஏற்படுத்திய
தம்பலகாம-கிண்ணியா உறவுகள் அவர்களின்
இறப்பின் பின்னரும் இருந்தது உம்மால்
உன் இறப்பின் பின் தொடருமா? இவ்வுறவுகள்

எதிர்பாரா சம்பவமொன்றினால் தம்பலகாமம் விட்டு கிண்ணியா
கிராமத்துக்கு அண்ணனைப்பிரிந்து
சுகிஅக்கா, அம்மா, அப்பாவுடன் அடி எடுத்து வைத்தாய்.
அன்று உமதுபாதம் எமது வீட்டில் தொடாத இடமில்லை
என்பத்தைந்து, என்பத்தாறு ஆண்டுகளில் சாதாரண தரம்
கற்கும் காலம் அது
கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரியில்,
பட்டாம் பூச்சியாய் பறந்து திரிந்தாய்,
முஸ்லிம், இந்து பாராது மாணவர் மனதை பற்றிக்
கொண்டது உன் இதயம்

கல்வி, விளையாட்டு, கதை கூறல் இவைகளில்
உம்மை எட்ட ஆளில்லை என்ற பெருமையை
ஒரே வீட்டுப் பிள்ளையாய் இருந்து எங்களையும் அடையச் செய்தாய்

திருமலை சென்ற பின்னரும் கல்வியைத் தொடர்ந்து
உமது திறமையைக் காட்டி உயர்ந்து நின்றாய்
பதவியில் பல உயர்வுகளைப்பெற்று மீண்டும் கிண்ணியா வந்தாய்

திருமண பந்தத்தில் இணைந்த பின்னரும்
உம்மா, வாப்பா, தாத்தா, தம்பி என்ற உறவுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது திருமுகத்தைக்காட்ட அவ்வப்போது
கணவருடன் காரில்வரும் அந்தகாட்சி
என் கண்முன்னே மறக்காத ஒருதிரைப்படம்

இறுதி தருவாயிலும் கிண்ணியா வீட்டில்
நடந்த சம்பவம் உன்னை விட்டு அகலவில்லை
றியாஸ் தம்பி புளியங்காய் பறிக்கச்சென்று
மதார் அதிபரிடம் மாட்டிக்கொண்ட அந்த கதை,
வார இறுதியில் உம்மா வீட்டிலிருந்து அம்மாவைப் பார்க்க
சசி, றமீசுடன் முகைதீன் வாவா சேர் வீட்டிற்கு சென்ற கதை
நஸ்லிதாத்தாவின் புத்திமதிகள், கனியின் பகிடிக்கதை
கல்லங்கபடமில்லா கியாசின் பேச்சு,குருவிக்கு பெயர்-
வந்த கதை பொருமைக்குவரை விளக்கனமான உம்மா,
இவை அனைத்தையும் பார்த்து ரசிக்கும் வாப்பா
என்று எல்லோர் கதையையும் உன் வாய் உரைத்தது.

என்று வாழ்ந்து காட்டுவேன் எனும் உனது கூற்று
மறு உலகில் நல்லடியார் மத்தியில் சிறப்புற வாழத்தான்
என்பது எனக்கு இறுதியில் தான் தெறிந்தது
என்றும் உமது ஆத்மா சாந்தி அடைய
குடும்ப சகிதம் எங்கள் அனைவரின் பிரார்த்தனை

நன்றி
காசுதீன் மாஸ்டர் குடும்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது மனங்களில் நீங்காத இடம் பெற்ற திருமதி. சசிதேவி லிங்கேஸ்வரன்

'இந்த உடல் அழிந்து விடுகின்ற காரணத்தினால்
நாம் இல்லாமல் போய் விடுவதில்லை.
பழைய உடலை நீத்து
ஆன்மா புதிய உடல்களில் புகுந்து விடுகின்றது'

(பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்)

எமது கல்லூரி நண்பர் திரு.வி.லிங்கேஸ்வரனை கரம்பிடித்த சசிதேவி லிங்கேஸ்வரன் அவர்கள் ஒரு சிறந்த அதிபரின் மகளாவார். மேலும் மிகவும் கண்ணியமான தாய் தந்தையருக்கு பிறந்த இவர் தனது கணவருக்கு நல்ல மனையாளாகவும், தாய் தந்தையருக்கு நல்ல மகளாகவும், சகோதர சகோதரிக்கு நல்ல சகோதரியாகவும், மகளுக்கு நல்ல தாயாகவும் வாழ்ந்தார். அயலவர்களுடன் மிகவும் அன்பாகப் பழகினார்.

இவரது குடும்ப வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியாக நகர்ந்து கொண்டிருந்த வேளை கொடிய சோதனையை சந்தித்தார். ஆயினும் மனம் தளராமல் மிகவும் தைரியமாக வாழ்ந்து தனது குடும்பத்தின் நல்வாழ்வுக்காக குடும்பத்தினை சிறப்பாக முகாமை செய்து கொண்டு வந்தார்.

இவரது கணவர் இவருடைய கனவுகளை நிச்சயம் நிறைவேற்றுவார்.

எமது மனங்களில் நீங்காத இடம்பிடித்த திருமதி ச.லிங்கேஸ்வரன் அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் மனவேதனையும் அடைந்தோம்.

இவ் இளம் வயதில் ஏற்பட்ட இந்த மரணம் எமக்கு எந்தளவுக்கு வலியை ஏற்படுத்தியதோ அதைவிட பல மடங்கு அவரது கணவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை, தாய், சகோதரர்களை பாதித்திருக்கும். அவர்களுக்கு ஆறுதல் சொல்ல வார்த்தைகள் போதுமானதாக இல்லை. எமது துணை அவர்களுக்கு துணிவைத் தரும். அந்த வகையில் அவர்களுடன் சேர்ந்துநின்று வாழ்வில் சோர்ந்து போகாதபடி உறுதியாக தோள் கொடுப்போம்.

இவருடைய ஆன்மாவானது தனது உடலை இழந்தாலும் இவரது குடும்பத்தினரின் நெஞ்சங்களில் கலந்து அவர்களுக்கு தைரியத்தை வழங்கும். மரணம் ஒருவரது வாழ்வின் முடிவல்ல. எமது மனங்களில் அவர் வாழ்ந்து கொண்டேயிருப்பார்.

இறைவனடி சேர்ந்த அன்னாருக்காக நாங்கள் எமது இரங்கலை தெரிவிப்பதுடன் அவருக்காக பிராத்திக்கின்றோம்.

**திருகோணமலை இந்துக்கல்லூரி**
**1979 உ/த பிரிவு நண்பர்கள்.**

R.K.M. Hindu College
A/L 79 Batch
Trincomalee



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

சசி மிஸ்... மீனா...

உனக்கும் நாங்கள்
இத்தனை வேகமாக....
இத்தனை விரைவாக...
கண்ணீர் அஞ்சலிகளும் செலுத்தி.. ஆழ்ந்த அனுதாபங்களும் தெரிவித்து...
மலர் வளையம் வைத்து...
பதாகைகளும் கட்டி .....
வழி அனுப்பிய காலமும் வந்ததுவோ...

1991 ஆவணி மாத காலப்பகுதியில் இலங்கை வங்கியின்
தவழும் ஊழியர்களாய்
நாம் இணைந்த நாட்கள்
நேற்று போல் உள்ளதே ...

இன்று உன் முப்பது வருட சேவை காலத்தையும் நிறைவேற்றிய
மன திருப்தியிலா... இல்லை
உடற் களைப்பிலா....
நீயாக நிரந்தர ஓய்வு கொண்டாய்...?

திருகோணமலை மாவட்ட
இலங்கை வங்கி கிளைகள் எங்கும் ஓடி ஓடி ..நாடிச் சென்று...
பணி புரிந்த காலங்கள்
இத்தனை விரைவாக உனக்கு மறைந்து போனதுவோ.?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர் என்ன ..
நட்பு வட்டாரங்கள் என்ன ...
உற்ற உறவுகள் என்ன...
முன்பின் அறியா புதியவர் என்ன ... மொழி என்ன.. இனம் என்ன..
ஊர் என்ன.. உறவென்ன... எவராயினும் அவர்கள்
வங்கி வாசலில் உள் நுழையும் போதே
வரவேற்கும் உன் சிரிப்பு...
இன்று கனவாகி காணாமல் போனதுவோ...
உடனிருக்கும் அனைவர்க்கும்
உற்ற தோழியாய் கலகலப்பு கதைகள் பல பேசிய
உன் வார்த்தைகளும் இன்று மௌனமாகி போனதுவோ...

கடமை தவறாத உன் பணியும்
காலம் தாழ்த்தா உன் சேவையும்
ஓய்வில்லா உன் உழைப்பும்.. கோபம் அறியா உன் பழக்கமும் ..
இன்று உன் கோர நோயின் முன் உதவாமல் போனதுவோ...
கொடிய காலனின் தீர்ப்பு
இது என்றால் எம் குறைகளை இறைவனிடத்தில் விட்டுவிடுகிறோம்
....

உன் நிரந்தர பிரிவால் துயருறும் உன் குடும்பத்தினர்
உற்றவர் உறவினர் அனைவரோடும் இணைந்து நின்று
உன் ஆன்ம ஈடேற்றத்திற்காக
நாமும் பிரார்த்திக்கின்றோம் .
எங்கள் திருகோணமலை இலங்கை வங்கி வரலாற்றில்
உன் பணி தடங்களும் பரந்திருக்கும்.

உன் தோழமை மிகு
இலங்கை வங்கி ஊழியர்கள்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணையாத தீபம்

பொன்னிற மேனியுடைய நாணம் கொண்ட பெண் போல் தலை சாய்த்து நெற்கதிர்கள் பரந்து விரிந்திருக்கும் தம்பலகாமத்தை பிறப்பிடமாகவும் திருக்கோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சசி தேவி லிங்கேஸ்வரன்(மீனா).

நண்பரகளை நட்பால் திணறடித்தவர் இந்த குழுமத்தில் உள்ள எல்லா நண்பர்களையும் தனித்தனியே தெரிந்து கொண்டவர் அவர்களுடன் உள மாறப் பழகியவர்.

இதனூடாக நண்பர்களின் தனித் திறன்களை அடையாளங்கண்டு அவர்களை உற்சாகப்படுத்துவார்.

இவ்வாறு நண்பர்களை உற்சாகப்படுத்தும் அமரர் சசிதேவி ஓர் தனித்திறமைசாலி. திருக்கோணமாவட்டத்தில் வங்கி ஆட்சேர்ப்பு தெரிவின்போது மாவட்டத்தில் முதன் நிலையினை பெற்று கொண்டவர். அவர் பணியாற்றும் வாடிக்கையாளர் விபரங்களை விரல் நுனியில் வைத்திருந்வர் அதனுடன் சகோதர மொழியினை நன்கு பேசக் கூடியவர் என அவருடன் பணி புரிந்தவர்கள் கூற கேள்வி பட்டிருக்கின்றோம். அமரர் சசிதேவி அவர்கள் மிகுந்த இலக்கிய ரசனையுடையவர் முக்கியமாக கவிதை, தமிழறிவு மற்றும் பாடல் விடயத்தில் நண்பர்களுக்கு அறிவுரை வழங்குவார்.

கொடிய நோயின் வேதனை அவரை வாட்டிய போதும். அதனை வெளிகாட்டாமல் நண்பர்களுடன் நகைச்சுவையாக பழகுவார். இறுதிவரை அதே நகைச்சுவை உணர்வு நோய்க்கு எதிரான தன்னம்பிக்கை போராட்டம்.

காலம் அவரை எம்மிடம் இருந்து பிரித்து விட்டது எனினும் காலம் எனும் சுழல்காற்று சுழன்று அடித்தாலும் நண்பர்களின் நெஞ்சங்களில் என்றும் அணையாத தீபமாக அமரர் சசிதேவி லிங்கேஸ்வரன் வாழ்வார்

ஓம் சாந்தி

86/89 நண்பர்கள் குழாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ குறிப்புகள்

- விளாமரத்தின் இலையை தண்ணீரில் போட்டு நன்கு கொதிக்க வைத்து குடித்தால் வாயுத் தொல்லை நீங்கும்.

- சுக்கு கலந்த வெந்நீரை அடிக்கடி குடித்து வந்தால் வாயுத்தொல்லை வராது.

- பற்கள் உறுதியாக மாவிலையை பொடி செய்து பல் துலக்க பற்கள் சுத்தமாகவும் உறுதியாகவும் இருக்கும்.

- தினமும் 1 மேசைக்கரண்டி நல்லெண்ணையுடன் 1 மேசைக்கரண்டி எலுமிச்சைசாறு சேர்த்து கலந்து பஞ்சினால் தொட்டு பருக்கள் உள்ள இடத்தில் தடவி ஊற வைத்து கழுவவும். தினமும் இப்படி செய்து வந்தால் பருக்கள் குறைவடைவதோடு தழும்புகளும் மறையும்.

- நல்லெண்ணையை ப்ரிட்ஜில் வைத்து குளிரச்செய்து பஞ்சுருண்டைகளை பயன்படுத்தி கண்களின் மீது தடவ கருவளையம் நீங்கிவிடும்.

- சுக்கு தூளுடன் உப்பு சேர்த்து பல்துலக்கி வர பல்வலி நீங்கும்.

- வயதானவர்களுக்கு ஏற்படும் பெரிய பிரச்சினை மறதி. எனவே இவர்கள் உலர்திராட்சை, முட்டை மஞ்சள்கரு, ஸ்ரோபெரி, முளைகட்டிய கோதுமை, வாழைப்பழம், பட்டை, வல்லாரைக்கீரை, வெங்காயம் உட்கொள்வதன் மூலம் எளிதாக சரி செய்ய முடியும்.

- வெற்றிலை சாற்றை தேங்காய் எண்ணையில் கலந்து வலி இருக்கும் இடத்தில் தடவி வந்தால் இடுப்பு வலி மற்றும் முதுகு வலி குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய சோற்றில் இவ்வளவு விசயமுள்ளதா?

முதல்நாள் சோற்றில் நீரை ஊற்றி, மறுநாள் சாப்பிடும் இந்தப பழைய சாதத்தில்தான் விற்றமின் B6, விற்றமின் B12 ஏராளமாக இருக்கிறது என ஆய்வுகள் கூறுகின்றது. தவிரவும் உடலுக்கு குறிப்பாக சிறு குடலுக்கு இது நன்மை செய்யும்.

இதனுடன் சிறிய வெங்காயம் சேரும்போது நோயெதிர்ப்பு சக்தி அபரிமிதமாக பெருகுகின்றது. எவ்விதமான காய்ச்சலும் எம்மை அணுகாது.

### பழைய சாதத்தின் நன்மைகள்.

01. காலையில் அருந்துவதால் உடல் சுறுசுறுப்பாக இருக்கும்.
02. இரவே தண்ணீர் ஊற்றி மூடி வைப்பதால் லட்சக்கணக்கான நல்ல பக்ரீரியாக்கள்இதில் உருவாகின்றது.
03. மறுநாள் இதைக் குடிக்கும்போது உடல் சூட்டைத் தணிப்பதோடு குடல்புண், வயிற்றுவலி என்பவற்றை குணப்படுத்தும்.
04. நார்ச்சத்து காரணமாக மலச்சிக்கல் இல்லாமல் உடலை சீராக இயங்க செய்கின்றது.
05. இந்த பழைய சாத உணவு முறையை சில நாள் தொடர்ந்து சாப்பிட்டால் இரத்த அழுத்தம் கட்டுப்பாட்டுக்குள் வந்து விடும், உடல் எடையும் குறையும்.
06. உடலுக்கு அதிகமான சக்தியை தந்து நாள் முழுக்க சோர்வின்றி வேலையைச் செய்ய உதவியாக இருக்கிறது.
07. ஒவ்வாமை, அரிப்பு போன்றவை கூட விரைவில் குணமாகிவிடும்.
08. நோய் எதிர்ப்பு சக்தி அதிகளவில் கிடைப்பதால், எந்த நோயும் அருகில் கூட வராது.
09. ஆரோக்கியமாகவும் அதே சமயம் இளமையாகவும் இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூடான வெந்தய தேனீர் தயாரிக்கும் முறை.

- ஒரு பாத்திரத்தில் நீரை ஊற்றி அதில் வெந்தயத்தை சிறிது சேர்த்து.
- மூடிவைத்து மூன்று நிமிடங்கள் நன்றாக கொதிக்க வைத்து இறக்க வேண்டும்.
- பின்னர் சூடு குறைந்து வெதுவெதுப்பாக ஆனவுடன் அதனை வடிகட்டி.
- தேன் சிறிது கலந்து குடிக்க வேண்டும்.

## வெந்தய தேனீர் குடிப்பதால் வரும் நன்மைகள்.

- குடல் மற்றும் சிறுநீரகங்களை சுத்தமாக வைத்துக்கொள்ள உதவும்.
- குடல் மற்றும் உணவுக் குழாய்களில் தங்கும் கழிவுகளை உடலிலிருந்து எளிதில் வெளியேற்றும்.
- நச்சுக்களை உடலில் தங்கவிடாது
- ரத்தசோகை போக்க.
- தாய்ப்பால் அதிகரிக்க.
- கொழுப்பு கரைய.
- உடல் எடை குறைய.
- வாய்வு நோய் குறைய.
- கூந்தல் வளர்ச்சிக்கு.
- மாதவிடாய் வலிக்கு.
- மலச்சிக்கல் அகல.
- இதய நோய் அகல.
- சக்கரை வியாதி நீங்க.
- பித்த நோய் அகல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எம்மை விட்டு பிரிந்த
அமரர் சசிதேவி லிங்கேஸ்வரன் அவர்களின்
மறைவுச்செய்தி கேட்டு வெளிநாடுகளில் இருந்தும்,
திருகோணமலையிலும் பல வகைகளிலும் உதவிகளும்
ஒத்தாசைகளும் புரிந்தவர்களுக்கும், நேரிலும் ஊடகங்கள்
வாயிலாகவும் உள், வெளி நாடுகளில் இருந்து ஆறுதல்
வார்த்தைகள் அனுதாபச் செய்திகள் கூறியவர்களுக்கும்
மலர்வளையங்கள் பதாதைகள் வைத்தவர்களுக்கும்
இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும்
எமது மனமுவந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

சபாபதி + பொன்னுகன்று
பொன்னுத்துரை + அம்மணிப்பிள்ளை
பொன்னையா + தங்கப்பிள்ளை
நடராசா + சீனிஅம்மா

தம்பையா — நவமணி + அழகரெட்ணம்
விநாயகமூர்த்தி — இராசமணி

சசிகலா + விஜயநாதன்
கார்த்திக்

சசிதரன் + சசிகலா
தருண்
அச்சிதா

சசிதேவி (மீனா) + லிங்கேஸ்வரன் (கோணேஸ்)
தன்சிகா

விமலானந்தன் + பாலரோகிணி

அகிலேஸ்வரன் (குட்டி) + சந்திரகுமாரி
பதுஷிகா
கோஜிதன்

அருந்ததி + புஸ்பராஜா
அபிசனா

சாயலிங்கம் (கண்ணன்) + பிரமிளா
ஜிரணியா
சாயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வளமான வாழ்விற்கு

தூய்மையாக இருப்பதும்
மற்றவர்களிற்கு நன்மை
செய்வதும் தான் எல்லா
வழிபாடுகளினதும் சாரமாகும்.
தீமை செய்பவன் தனக்கும்
மற்றவர்களுக்கும் தீமை செய்கிறான்.
நன்மை செய்பவன் தனக்கும்
பிறர்க்கும் நன்மையே செய்கிறான்.
உடலும் உள்ளமும் தூய்மையின்றி
கோயிலுக்குப் போவதும்
இறைவனை வழிபடுவதும் பயனற்றதாகும்.
நேர்மையுடனும் தைரியமாகவும்
பக்தி சிரத்தையுடனும் வாழ்ந்தால்
இறைவனை அடைவது உறுதி.

"நன்னெறியே இறைவணக்கம்"

- சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ART 0776566173